**O.S.No. 90/2020 Date 03.07.2023**

**<u>வாசா1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

என் அப்பா 01.10.2018 அன்று எனக்கும் என் அக்காவிற்கும் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். என் அப்பா 2020 ல் இறந்தார்.

செட்டில்மெண்ட் எழுதி வைத்த தேதியில் நான் பதிவு அலுவலகத்திற்கு வரவில்லை. செட்டில்மெண்ட் எழுதிய விவரம் என் அப்பா சொல்லி எனக்குத் தெரியும் அவர் சொன்ன தேதி எனக்கு தெரியாது அந்த சமயத்தில் சொன்னார். செட்டில்மெண்ட் ஆவணத்தில் அசல் என் அப்பாவின் லாக்கரில் இருக்கிறது என்று என் அப்பா சொன்னார் என் அப்பா இறந்துவிட்டதால் தற்போதும் லாக்கரில் இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. இந்தியன் வங்கி தொல்காப்பியர் சதுக்கம் கிளையில் என் அப்பா வங்கி கணக்கு வைத்திருந்தார். லாக்கரில் இருந்து அந்த ஆவணங்களை எடுக்க நாங்கள் முயற்சிக்கவில்லை. மூல ஆவணங்களும் எங்களிடம் இல்லை. என் அப்பா அந்த வீட்டில் இருந்ததால் அவரை வெளியேற்ற நாங்கள் முயற்சிக்கவில்லை. செட்டில்மெண்ட் ஆவணத்தை தொடர்ந்து சொத்தை எங்களுடைய உடைமையில் எடுத்துக்கொள்ள முயற்ச்சித்தோமா என்றால் என் அப்பா அந்த வீட்டில் இருந்தார் நாங்கள் வரும் போது அந்த வீட்டில் இருந்தோம். என் அப்பா நாங்கள் வரும்போது இருப்பதற்காக அந்த வீட்டை செட்டில்மெண்ட் கொடுத்தார் ஆனால் நாங்கள் வருவதற்கு சந்தர்ப்பம் இல்லை நானும் என் அக்காவும் வெளியூரில் வேலை பார்த்து வந்தோம். என் அக்கா சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறார் சுமார் 10 15 வருடங்களாக வேலை பார்க்கிறார் என்றால் ஆமாம். வழக்கு சொத்துக்கான வருவாய்துறை ஆவணங்கள் யார் பெயரில் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. என் அப்பா இறந்த பிறகு ஒரு முறை குடிநீர் கட்டணம் வரி செலுத்தினோம் பெயர் மாற்றுவதற்கு வாரிசுச் சான்றிதழ் கேட்டார்கள் அதனால் பெயர் மாற்றவில்லை. என் அப்பா உயிருடன் இருந்த வரை வருவாய்த்துறை ஆவணங்கள் வரி விதிப்பிலோ பெயர் மாற்றம் செய்ய என் அப்பாவோ நாங்களோ முயற்சிக்கவில்லை. செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் மூல ஆவணங்களின் அசலை என் அப்பா பாதுகாப்பாக வைத்திருப்பார் என்று நான் அவற்றை கேட்கவில்லை. என் அப்பா இறந்த பிறகு ஒருமுறை வரி செலுத்தினோம் அதன்பிறகு பிரதிவாதி அங்கு இருந்ததால் எங்களால் வரி செலுத்த இயலவில்லை. பிரதிவாதிக்கு அந்த சொத்தில் உரிமை இருக்கிறது என்று நீதிமன்றத்தில்

உத்தரவாகி இருக்கிறது என்று என் அப்பா சொன்னாரா என்றால் என் அப்பா விவாகரத்து வழக்கு தாக்கல் செய்திருந்தார் அந்த வழக்கு முடியும் வரை பிரதிவாதி அந்த வீட்டில் இருக்கலாம் என உத்தரவாகியிருந்தது ஆனால் வழக்கு முடிவதற்குள் என் அப்பா இறந்து விட்டதால் அந்த வழக்கு முடிக்கப்பட்டது. பிரதிவாதி அந்த வீட்டை விட்டு வெளியேற்றக்கூடாது என்ற உத்தரவு விவாவகரத்து வழக்கில் பிறப்பிக்கப்பட்டதா என்று எனக்குத் தெரியாது. விவாகரத்து வழக்கு, டிவிசி வழக்கு என் அப்பாவின் பென்சன் பேப்பரை பிரதிவாதி திருடியதாக ஒரு வழக்கு மற்ற வழக்குகளும் இருந்தன. வழக்கு சொத்தில் இருந்து வெளியேற்றக்கூடாது என்று பிரதிவாதி என் அப்பாவிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் அந்த வழக்கின் விவரம் எனக்குத் தெரியாது. வழக்கு சொத்தின் அசல் ஆவணங்கள் என் வசம் இல்லை என்று வழக்குரையில் சொல்லியிருக்கிறேனா என்று எனக்குத் தெரியாது. என் அப்பா இறந்த சமயத்தில் என் தெருவில் உள்ளவர்களை வைத்து ஒருமுறை பஞ்சாயத்து பேசினோம் அதன் பிறகு வழக்கறிஞர் மூலமாக பஞ்சாயத்து பேசினோம் பஞ்சாயத்து பேசிய தேதிகள் ஞாபகமில்லை. தெருக்காரர்களை வைத்து பஞ்சாயத்து பேசிய போது நாங்கள் மட்டும் தான் போனோம் பிரதிவாதி வரவில்லை.பிரதிவாதி என் அப்பா வேலை பார்த்த பிஎஸ்என்எல் யூனியன் ஆட்களிடம் எங்களிடம் பேசி வீட்டை அவருக்குத்தர சொல்லி சொல்லியிருக்கிறார். இந்த வழக்கிற்கு பின்னரும் பிஎஸ்என்எல் யூனியன் ஆட்களிடம் சொல்லியிருக்கிறார். அவ்வாறு பஞ்சாயத்து எதுவும் பிரதிவாதி பேச முயற்சிகவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எதிராக காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தோம் அது சிவில் பிரச்சினை அதனால் எங்களால் எதுவும் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். அந்த புகார் சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என் மீதும் என் அக்கா மீதும் வீட்டில் இருந்து தன்னை வெளியேற்றக்கூடாது என்று உறுத்துக்கட்டளை கோரி பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம் அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த வழக்கு முன்சீப் கோர்ட்டில் நடக்கிறது. முதல் விசாரணயில் சொல்லியுள்ள அவஎண்.257/2019 வழக்கு எந்த நீதிமன்றத்தில் எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்று தெரியாது. அந்த வழக்கு தள்ளுபடியானதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. வழக்கு சொத்திற்காக பிரதிவாதியிடமிருந்து என் அப்பா நகைகளையும் பணத்தையும் பெற்றுக் கொண்டதாக என் அப்பா என்னிடம் சொல்லியிருக்கிறாரா என்றால் அது தவறான தகவல். வழக்கு சொத்து அடமானத்தில் இருந்ததை மீட்பதற்கு

பிரதிவாதியிடம் இருந்து என் அப்பா பணம் வாங்கியதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மீது வங்கிக்கடன் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. வாசாஆ.16,17

வழக்கிற்கும் எனக்கும் என் அக்காவிற்கும் சம்மந்தம் இல்லை. என் அப்பாவின் இறுதி காரியத்தை நாங்கள் வழக்கு சொத்து வீட்டில் வைத்துதான் செய்தோம். என் அப்பா இறந்த அன்று நாங்கள் அந்த வீட்டிற்கு வரவில்லை என்றும் இறுதிகாரியங்களை நாங்கள் செய்யவில்லை பிரதிவாதி தான் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா உண்மையில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியிருந்தால் ஆவணங்களையும் சுவாதீனத்தையும் ஒப்படைத்து இருப்பார் என்றும் யாருடைய கட்டாயத்திலோ தான் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றும் அவற்றை ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா விபத்தில் இறந்ததற்காக நாங்கள் இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்யவில்லை . வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை பெறுவதற்கு நாங்கள் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-A.மலர்விழி)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.